Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material

# தமிழ் சமச்சீர் கல்வி புத்தகம்

# 10-ஆம் வகுப்பு

## கடவுள் வாழ்த்து

- மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
  கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
  பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
  கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே

- மாணிக்கவாசகர்

சொற்பொருள்:

- மெய் -உடல்
- விதிவிதிர்த்து - உடல் சிலிர்த்து
- விரை - மணம்
- நெகிழ - தளர
- ததும்பி - பெருகி
- கழல் - ஆண்கள் காலில் அணியும் அணிகலன்
- சயசய - வெல்க வெல்க

இலக்கணக்குறிப்பு:

- விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று

ஆசிரியர் குறிப்பு:

- சைவ சமயக்குரவர் நால்வரில் ஒருவர்.
- திருவாதவூரில் பிறந்தவர். இவ்வூர் மதுரைக்கு அருகில் உள்ளது.
- இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக பணிப் புரிந்தார்.
- திருப்பெருந்துறை இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்.
- இவரை “அலுத்து அடியடைந்த அன்பர்” என்பர்.
- **திருவாசகமும் திருகொவையாரும் இவர் அருளியவை.**
- இவர் எழுப்பிய கோவில், தற்போது “ஆவுடையார் கோவில்” என
- வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுகோட்டை மாவட்டம்) உள்ளது

நூல் குறிப்பு:

- சைவத் திருமுறைகளில் எட்டாவது திருமுறை இவரின் திருவாசகமும் திருகோவையாரும் ஆகும்.
- திருவாசகத்தில் 658 பாடல்கள் உள்ளன.
- திருவாசகத்தை சிறப்பிக்க, "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்னும் தொடர் வழங்கலாயிற்று.
- திருவாசகத்தை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.
- ஜி.யு.போப்:-உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனதை கவர்கின்றவர் யாரும் இல்லை" என்கிறார் ஜி.யு.போப்.

## திருக்குறள்

சொற்பொருள்:

- விழுப்பம் - சிறப்பு
- ஓம்பப்படும் - காத்தல் வேண்டும்
- பரிந்து - விரும்பி
- தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்
- குடிமை - உயர்குடி
- இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்
- அழுக்காறு - பொறாமை
- ஆகம் - செல்வம்
- ஏதம் - குற்றம்
- எய்துவர் - அடைவர்
- இடும்பை - துன்பம்
- வித்து - விதை
- ஒல்லாவே - இயலாவே
- ஒட்ட - பொருந்த
- ஒழுகல் - நடத்தல்
- கூகை - கோட்டான்
- இகல் - பகை
- திரு - செல்வம்
- தீராமை - நீங்காமை



tnpsctamilnadu.weebly.com

- பொருதகர் - ஆட்டுக்கடா
- சேருவர் - பகைவர்
- சுமக்க - பனிக
- கிழக்காந்தலை - தலைகீழ்(மாற்றம்)
- எய்தற்கு - கிடைத்தற்கு
- கூம்பும் - வாய்ப்பபற்ற

இலக்கணக்குறிப்பு:

- ஒழுக்கம் - தொழிற்பெயர்
- காக்க - வியங்கோள் வினைமுற்று
- பரிந்து, தெரிந்து - வினையெச்சம்
- இழிந்த பிறப்பு - பெயரெச்சம்
- கொளல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர்
- உடையான் - வினையாலணையும் பெயர்
- உரவோர் - வினையாலணையும் பெயர்
- எய்தாப் பழி - ஈறு கேட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நல்லொழுக்கம் - பண்புத்தொகை
- சொலல் - தொழிற்பெயர்
- அருவினை - பண்புத்தொகை
- அறிந்து - வினையெச்சம்

ஆசிரியர் குறிப்பு:

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது.
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொது நெறி காட்டியவர்.
- இவரின் காலம் கி.மு.31ஆம் நூற்றாண்டு என்பர்.
- தமிழக அரசு தைத் திங்கள் இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாளாக அறிவித்து கொண்டாடுகிறது.
- திரு + குறள் = திருக்குறள்
- உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலாகவும், ஒன்பது இயல்களையும், 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டது.

tnpsctamilnadu.weebly.com

- “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகம்” என்றும், “இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே” என்றும் பாவேந்தர் போற்றுகின்றார்.
- மலையத்துவாசன் மகன் ஞானப்பிரகாசம் 1812 இல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டார்.

## ஏலாதி

**சொற்பொருள்:**

- வணங்கி - பணிந்து
- மாண்டார் - மாண்புடைய சான்றோர்
- நுணங்கிய நூல் - நுண்ணறிவு நூல்கள்
- நோக்கி - ஆராய்ந்து

**இலக்கணக்குறிப்பு:**

- நூல்நோக்கி - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- பலியில்லா மன்னன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**

- ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார்.
- இவர் சமண சமயத்தை சார்ந்தவர்.
- காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு.
- இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட 81 வெண்பாக்களைக் கொண்டுள்ளது.
- ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றால் ஆன மருந்துக்கு ஏலாதி எனப் பெயர்.
-

## உயர்தனிச் செம்மொழி

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்:**

- “வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
  வேரூன்றிய மால்முதல் உயிர்மொழி”

என்று தமிழின் பெருமையைப் போற்றுகிறார் பெருஞ்சித்திரனார்.

- “திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்” என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

tnpsctamilnadu.weebly.com

- பாவாணர் கூற்று:

“தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் 16 செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி” என்பார் பாவாணர்.

முஸ்தபாவின் செம்மொழி தகுதிப்பாடுகள்:

- தொன்மை, பிறமொழித் தாக்கமின்மை, தாய்மை, தனித்தன்மை, இலக்கிய வளமும் இலக்கியச் சிறப்பும், பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு, உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை வெளிபாடு, மொழிக் கோட்பாடு எனப் 11 தகுதிகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபா வரையறுத்துள்ளார்.

தொன்மை:

- முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அவன் பேசிய மொழி தமிழ் மொழியே என்பர்.
- உலகம் தோன்றிய போதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருத்து “என்றுமுள தென்தமிழ்” என்பார் கம்பர்.

பிறமொழித் தாக்கமின்மை:

- பிறமொழி சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்காது.

அனால், தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது.

தாய்மை:

- தமிழ் மொழியானது திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது.
- தமிழ் மொழி பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்பார் கால்டுவெல்.
- 1090 மொழிகளுக்கு வேர்ச்சொல்லையும், 109 மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ்.

தனித்தன்மை:

- இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைத் கொண்டது தமிழ்.

தமிழர் அகம், புரம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர்.

- திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துள்ளது.

இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு:

- உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்.

- இவற்றின் மொத்த அடிகள் = 26350.
- அக்காலத்தே இவ்வளவிற்கு "விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகின் வேறு எம்மொழியிலும் இல்லை" என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த "கமில்சுவலபில்" என்னும் செக் நாடு மொழியியல் அறிஞரின் முடிபு.
- மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டி இருக்கின்றார்.
- சங்க இலக்கியங்கள் "மக்கள் இலக்கியங்கள்" எனப்படும்.
- "தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்கச் விருப்பதை உண்டாக்குவது" என்பார் கெல்லட்.
- நமக்கு கிடைத்த இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானது தொல்காப்பியம்.
- தொல்காபிய்யம் மூன்று இலக்கணங்களை கூறியுள்ளார். அவரின் ஆசிரியர் அகத்தியர் ஐந்து இலக்கணங்களை கூறியுள்ளார்.

பொதுமைப் பண்பு:

- தமிழர் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தவர்கள்.
- செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டவர்கள்.

நடுவுநிலைமை:

- சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை.
- இயற்கையோடு இணைந்தவை.
- மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துக்களை மொழிபவை.
- பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு:
- சங்கப் படைப்புகள், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை" முதலிய பண்பாட்டு நெறிமுறைகளையும் வெளிப்படுத்திகிறது.

உயர் சிந்தனை:

- "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என உலக மக்களை ஒன்றினைந்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு.
- "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனத் திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது.

கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு:

- தமிழ்ச்சான்றோர் மொழியை, "இயல், இசை, நாடகம்" எனப் பிரித்து வளமடையச் செய்தனர்.
- எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர்.

## மொழிக் கோட்பாடு:

- "இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது" என்பார் முனைவர் எமினோ.
- ஒருமொழிக்கு 35 ஒலிகள் இருந்தாலே போதும் என்பர். ஆனால் தமிழோ 500 ஒலிகளைக் கொண்டுள்ளது.

## செம்மொழி:

- இவ்வருஞ்சிறப்புமிக்க தமிழைச் "செம்மொழி" என அறிவித்தல் வேண்டும் என்ற முயற்சி 1901இல் தொடங்கி 2004வரை தொடர்ந்தது.
- நடுவண் அரசு 2004ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

# பரிதிமாற் கலைஞர்

- சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரைப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழாக்கிக் கொண்டவர்.
- மதுரை அடுத்த விளாச்சேரியில் பிறந்தார்.
- பெற்றோர் = கோவிந்தசிவனார், இலட்சுமி அம்மாள்.
- தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாக, 1870ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.
- தந்தை கோவிந்த சிவனாரிடமே வடமொழி பயின்றார்.
- மகாவித்துவான் சபபதியாரிடம் தமிழ் பயின்றார்.
- சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இளங்கலை பயின்றார்.
- இளங்கலை தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

## இயற்றமிழ் மாணவர்:

- தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன், அவர்களை "இயற்றமிழ் மாணவர்" எனப் பெயரிட்டு அழைத்தார்.

## மதுரைச் தமிழ்ச்சங்கம்:

- மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர். பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை தேவர் மேற்பார்வையில் பரிதிமாற்கலைஞர், உ.வே.சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்களின் துணையோடு மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

## திராவிட சாஸ்திரி:

- யாழ்பாணம் சி.வை.தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையும் கவிபாடும் திறனையும் கண்டு, "திராவிட சாஸ்திரி" என்னும் சிறப்புப் பட்டதை வழங்கினார்.

தனிப்பாசுரத்தொகை:

- பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய "தனிப்பாசுரத்தொகை" என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டார்.
- இந்நூலினை, ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

கம்பராமாயண உவமை:

- பரிதிமாற் கலைஞர் சென்னைக் கிறித்துவ கல்லூரியில் படித்த பொது நடந்த நிகழ்வு.
- கல்லூரி முதல்வரும் ஆங்கிலப் பேராசிரியருமான வில்லியம் மில்லர் என்பவர் டென்னிசன் இயற்றிய "ஆர்தரின் இறுதி" வ்ன்னும் நூலில் இருந்து ஒரு பாடலி சொல்லி அதில் படகின் துடுப்பு அன்னப்பறவைக்கு உவமையாக கூறப்பட்டது.
- தமிழில் இது போன்ற உவமைகள் உண்டா என அவர் கேட்க, பரிதிமாற் கலைஞர் கம்பராமாயண குகப்படலத்தில் உள்ள "விடுநனி கடிது" என்னும் பாடலை பாடி பொருள் கூறினார்.

தமிழின் சிறப்பை உணர்த்தல்:

- வடமொழியும் தமிழ்மொழியும் கலந்து எழுதுதல் என்பது, தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப் பலம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது பரிதிமாற்கலைஞரின் கருத்து.
- தமிழ்த்தாயின் எழில் மிகுந்த உடலுக்கு, மனிபிரவாள நடை எரிச்சலைத் தான் தரும் என்பதனை உணர்ந்த பரிதிமாற் கலைஞர், வடசொல் கலப்பைக் கண்டித்தார்.

தமிழ்த்தொண்டு:

- பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விலக்கி வடமொழியை கொண்டு வர முடிவுசெய்யப்பட்டது.
- ஆனால் பரிதிமாற் கலைஞரின் உறுதியான எதிர்பால் பல்கலைக்கழகம் அம்முடிவை கைவிட்டது.

படைப்புகள்:

- "ரூபாவாதி, கலாவதி" முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார்.
- அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்தார்.
- "சித்திரக்கவி" என்னும் நூலைப் படைத்தார்.

- குமரகுருபரரின் "நீதிநெறிவிளக்கம்" நூலில் இருந்து 51 பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

இதழ்ப் பணி:

- மு.சி.பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த :ஞானபோதினி" என்னும் இதழைப் பரிதிமாற் கலைஞர் நடத்தினார்.
- மும்மொழிப் புலமை உடையவர்.
- மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் "செந்தமிழ்" இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தார்.
- தமிழ்மொழி "உயர்தனிச் செம்மொழி" என முதன்முதலாக நிலைநாட்டினார்.

மறைவு:

- தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர் தமது 33 அகவையில் இயற்கை எய்தினார்.
- நடுவண் அரசு பரிதிமாற்கலைஞர்க்கு அஞ்சல்தலை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

## சிலப்பதிகாரம்

சொற்பொருள்:

- கொற்கை - பாண்டிய நாட்டின் துறைமுகம்
- தென்னம் பொருப்பு - தென்பகுதியில் உள்ள பொதிகைமலை
- பலியோடு படரா - மறநெறியில் செல்லாத
- பசுந்துணி - பசிய துண்டம்
- தடக்கை - நீண்ட கைகள்
- அறுவற்கு இளைய நங்கை - பிடாரி
- கானகம் - காடு
- உகந்த - விரும்பிய
- தாருகன் - அரக்கன்
- செற்றம் - கறுவு
- தேரா - ஆராயாத
- புள் - பறவை
- புன்கண் - துன்பம்
- ஆழி - தேர்ச்சக்கரம்
- படரா - செல்லாத
- வாய்முதல் - உதடு

இலக்கணக்குறிப்பு:

- மடக்கொடி - அன்மொழித்தொகை
- தேரா மன்னா, ஏகாச் சிறப்பின் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- தடக்கை - உரிச்சொற்றொடர்
- புன்கண், பெரும்பெயர், அரும்பெறல் - பண்புத்தொகை
- உகுநீர், சூழ்கழல், செய்கொல்லன் - வினைத்தொகை
- அவ்வூர் - சேய்மைச்சுட்டு
- வாழ்தல் - தொழிற்பெயர்
- என்கால் என்பெயர், நின்னகர், என்பதி - ஆறாம் வேற்றுமைத்தொகை
- புகுந்து - வினையெச்சம்
- தாழ்ந்த, தளர்ந்த - பெயரெச்சம்
- வருக, தருக, கொடுக - வியங்கோள் வினைமுற்று

பிரித்தறிதல்:

- எள்ளறு = எள் + அறு
- புள்ளுறு = புள் + உறு
- அரும்பெறல் = அருமை + பெறல்
- பெரும்பெயர் = பெருமை + பெயர்
- அவ்வூர் = அ + ஊர்
- பெருங்குடி = பெருமை + குடி
- புகுந்தீங்கு = புகுந்து + ஈங்கு
- பெண்ணணங்கு = பெண் + அணங்கு
- நற்றிறம் = நன்மை + திறம்
- காற்சிலம்பு = கால் + சிலம்பு
- செங்கோல் = செம்மை + கோல்

ஆசிரியர் குறிப்பு:

- இளங்கோவடிகள் சேரமரபினர்.
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை.
- தமையன் = சேரன் செங்குட்டுவன்
- இவர் இளமையிலே துறவு பூண்டு குணவாயிற் கோட்டம் சென்று தங்கினார்.
- சமய வேறுபாடற்ற துறவி.
- பாரதியார் இவரை, "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்றார்.

tnpsctamilnadu.weebly.com

நூல் குறிப்பு:

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்
- கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின், சிலப்பதிகாரமாயிற்று.
- இக்காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெரும் காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.
- புகார்க்காண்டம் = 10 காதை
- மதுரைக்காண்டம் = 13 காதை
- வஞ்சிக்காண்டம் = 7 காதை
- இக்காப்பியம் "உரையிடை இட்ட பாட்டைச்செய்யுள்" என அழைக்கப்படுகிறது.
- முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைக் போற்றிப் புகழ்வார்.
- "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியார் புகழ்கிறார்.
- வழக்குரைக் காதை மதுரைக்கான்டத்தின் பத்தாவது காதை.
- "இசை நாடகமே" சிலப்பதிகாரக் கதையின் உருவம்

நூலெழுந்த வரலாறு:

- சேரன் செங்குட்டுவன், சீத்தலைச்சாத்தனாரோடும் இளங்கோவடிகளோடும் மலைவளம் காணச் சென்றான்.
- அங்கிருந்த மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண் தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், 'அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.
- அதனைக் கேட்ட இளங்கோவடிகள், "இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்" ஏறனு கூறினார்.
- சாத்தனாரும், "அடிகள் நீரே அருளுக" என்றார்.

நூற்கூறும் உண்மை:

- அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்

## <u>தமிழ் வளர்ச்சி</u>

சொற்பொருள்:

- தெளிவுறுத்தும் - விளக்கமாய் காட்டும்
- சுவடி - நூல்
- எளிமை - வறுமை
- நாணிடவும் - வெட்கப்படவும்
- தகத்தகாய - ஒளிமிகுந்த
- சாய்க்காமை - அழிக்காமை
- தாபிப்போம் - நிலைநிறுத்துவோம்

இலக்கணக்குறிப்பு;

- புதிது புதிது, சொல்லிச் சொல்லி - அடுக்குத்தொடர்
- செந்தமிழ் - பண்புத்தொகை
- சலசல - இரட்டைக்கிளவி

பிரித்தறிதல்:

- வெளியுலகில் = வெளி + உலகில்
- செந்தமிழ் = செம்மை + தமிழ்
- ஊரறியும் = ஊர் + அறியும்
- எவ்விடம் = எ = இடம்

ஆசிரியர் குறிப்பு;

- பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- இவர் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் நால் புதுவையில் பிறந்தார்.
- தந்தை கனகசபை, தாய் இலக்குமி.
- இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் எனச் சிறப்பிக்கபடுவார்.
- குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகள்.

## பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள்

பாவேந்தரின் புகழ்மொழி:

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்

- எனப் பாவேந்தர் பெரியாரை புகழ்கிறார்.

பெரியாரின் பெண்விடுதலை சிந்தனைகள்:



tnpsctamilnadu.weebly.com

- பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை.
- ஒன்று, அடிப்படைத் தேவைகள் = பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி
- மற்றொன்று, அகற்றப்படவேண்டியவை = குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு

**பெண்கல்வி:**

- பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது என்றார்.
- "அங்கள் பங்களைப் படிக்கச் வைக்க வேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும்.
- நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவு அட்டர சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்றார்.

**பெண்ணுரிமை:**

- "ஆணுக்குப் பெண் இளைப்பில்லை" என்று சிந்தித்தவர் பெரியார்.
- பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மநிகலாக விளங்க வேண்டும்" என்று வலியுறித்தினார்.

**சொத்துரிமை:**

- பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு காரணம் என்று உணர்ந்தார்.
- அதற்காகக் அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.

**அரசுப்பணி:**

- அரசாங்கத்தின் அனைத்துத்துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் பொது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றார்.

**குழந்தைமணம்:**

- குழந்தை திருமணம் பற்றி "சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு" எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டார்.

**மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்:**

- சமுதாயத்தில் முறையான அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால் தான், இம்மாதிரியான தீமைகள் ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாற வேண்டும்.

- தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும் என்றார்.
- கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றார்.

ஒழுக்கம்:

- ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாகும் என்றார்.
- பெரியார், பெண்களே சமூகத்தின் கண்கள் என்று கருதியவர்.

## கம்பராமாயணம்

சொற்பொருள்:

- ஆயகாலை - அந்த நேரத்தில்
- அம்பி - படகு
- நாயகன் - தலைவன்
- நாமம் - பெயர்
- கல் - மலை
- திரள் - திரட்சி
- துடி - பறை
- அல் - இருள்
- சிருங்கிபேரம் - கங்கைககரையோர நகரம்
- திரை - அலை
- மருங்கு - பக்கம்
- நாவாய் - படகு
- நெடியவன் - இராமன்
- இறை - தலைவன்
- பண்ணவன் - இலக்குவன்
- பரிவு - இரக்கம்
- குஞ்சி - தலைமுடி
- மேனி - உடல்
- மாதவர் - முனிவர்
- முறுவல் - புன்னகை
- விளம்பல் - கூறுதல்
- கார்குலாம் - மேகக்கூட்டம்
- பார்குலாம் - உலகம் முழுவதும்

- குரிசில் - தலைவன்
- இருத்தி - இருப்பாயாக
- நயனம் - கண்கள்
- இந்து - நிலவு
- நுதல் - நெற்றி
- கடிது - விரைவாக
- முரிதிரை - மடங்கிவிழும் அலை
- அமலன் - குற்றமற்றவன்
- இளவல் - தம்பி

இலக்கணக்குறிப்பு:

- போர்க்குகன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
- கல்திரள்தோள் - உவமைத்தொகை
- நீர்முகில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
- இருந்தவள்ளல் - பெயரெச்சம்
- வந்துஎய்தினான் - வினையெச்சம்
- கூவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- குறுகி, சேவிக்க - வினையெச்சம்
- கழல் - தானியாகுபெயர்
- அழைத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று
- வருக - வியங்கோள் வினைமுற்று
- பணிந்து, வளைத்து, புதைத்து - வினையெச்சம்
- இருத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று
- தேனும் மீனும் - எண்ணும்மை
- மாதவர் - உரிச்சொற்றொடர்
- அமைந்த காதல் - பெயரெச்சம்
- தழீஇய - சொல்லிசை அளபெடை
- கார்குலாம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- உணர்த்துவான் - வினையாலணையும் பெயர்
- தீராக் காதலன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்
- இனிய நண்ப - குறிப்புப் பெயரெச்சம்
- நெடுநாவாய் - பண்புத்தொகை
- தாமரை நயனம் - உவமைத்தொகை

- நனிகடிது - உரிச்சொற்றொடர்
- நெடுநீர் - பண்புத்தொகை
- என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- நன்னுதல் - பண்புத்தொகை
- நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை

ஆசிரியர் குறிப்பு:

- கம்பர் தேரழுந்தூரில் பிறந்தார்.
- இவ்வூர், நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது.
- கம்பரின் தந்தையர் ஆதித்தன்.
- கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர்.
- இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தவர்.
- காலம் கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டு.
- தம்மை ஆதரித்த வள்ளல் சடயப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.
- கம்பராமாயணம், சடகோபர் அந்தாதி, சிலை எழுபது, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய கம்பர் இயற்றிய நூல்கள்.
- சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் ஆகியோர் இவர் காலத்துப் புலவராவர்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும், விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியிற் பெரியவர் கம்பர் என்னும் தொடர்கள் கம்பரின் பெருமையை அறியலாம்.
- “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்” என்று பாரதியார் கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

நூல்குறிப்பு:

- வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.
- கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
- கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது.
- காண்டம் என்பது பெரும்பிரிவையும் படலம் என்பது அதன் உட்பிரிவையும் குறிக்கும்.

- இந்நூலின் சிறப்புக் கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் "தமிழுக்கு கதி" என்பர்.
- குகப்படலம் அயோத்தியா காண்டத்தில் ஏழாவது படலம் ஆகும். இதனை கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

## அண்ணல் அம்பேத்கர்

### பிறப்பு:

- மராட்டிய மாநிலத்தில் கொண்கன் மாவட்டத்தில் உள்ள அம்பவாடே என்னும் சிற்றூரில் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள் அம்பேத்கர்பிறந்தார்.
- பெற்றோர் = இராம்ஜி சக்பால், பீமாபாய்.
- செல்வம் நிறைந்த குடும்பத்தில் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார்.
- அவரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி.
- தந்தை அவருக்கு சூடிய பெயர் பீம்.

### கல்வி:

- தன் ஆசிரியர் மீது கொண்ட பற்றின் காரணமாக தன் ஆசிரியர் பெயரான அம்பேத்கர் என்பதை தம் பெயராக ஆக்கிக் கொண்டார்.
- அம்பேத்கர் 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்.
- பரோடா மன்னர் பொருளுதவியுடன் 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915இல் முதுகலைப் பட்டமும் 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.
- மும்பையில் சிறிதுகாலம் பொருளியல் பேராசிரியராக பணியாற்றினார்.
- மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
- அம்பேத்கர் இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

### முதல் உரிமைப்போர்:

- 1927ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டம் நடத்தினார்.

### விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்:



tnpsctamilnadu.weebly.com

- இங்கிலாந்து சொல்வதற்கு எல்லாம் இந்தியா தலை அசைக்கும் என்பது தவறு; இந்நிலை எப்போதோ மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும் என்றார்.
- 1930ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைப்பெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துக்கொண்டார்.
- அம்மாநாட்டில், "அறைவயித்றுக் கஞ்சிக்கு அல்லறப்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" என்று தனது கருத்தை தொடங்கினார்.
- வெறும் எஜமான மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை; எங்கள் கைகளில் அரசியல் வந்தால் ஒழிய, எங்கள் குறைகள் நீங்கா என மொழிந்தார்.

சட்ட மாமேதை:

- விடுதலைக்குப் பிறகு இந்திய அமைச்சரவையில் அண்ணல் அம்பேத்கரையும் இடம்பெறச் செய்யவேண்டும் என்று நேரு விரும்பினார்.
- அம்பேத்கர் சட்ட அமைச்சரானார்.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுக்க எழுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.
- பலரும் செயல்படாமல் விலகினார். இறுதியில் அம்பேத்கர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியைச் செய்து முடித்தார்.
- 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26ஆம் நாள் இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்:

- "ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம். உழைப்பும் கல்வியும் அட்டர செல்வம் மிருகத்தனம்" என்றார்.
- கற்பித்தல், அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்;
- விருப்புவெருப்பட்டற்ற முறையில் கற்பித்தல் நிகழ வேண்டும் என்றார்.
- 1946ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தை தோற்றுவித்தார்.
- மும்பையில் அவரின் அறிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் உருவாக்கப்பட்டது.

பொருளாதார வல்லுநர்:

- இவர் "இந்தியாவின் தேசிய பங்குவீதம்" என்ற நூலை எழுதினார்.

தொழில் துறையில் பொருளாதார வளர்ச்சிப் பெற புதுப்புதுக் கருத்துக்களைக் வெளியிட்டார்.

இந்திய வரலாற்றின் புதிய பக்கங்கள்:



tnpsctamilnadu.weebly.com

- இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர்.
- சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூக வாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்றார்.
- சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார்.
- இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்குச் சாதி என்பது, நன்மை தராது.இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கிறது. அது மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்துவிட்டது.
- இதனை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் போதும்; அதுவே எனக்கு நிறைவு தரும்" என்றார்.

அம்பேத்கரின் இலட்சிய சமூகம்:

- அவர், "ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றார்.
- "சனநாயகத்தின் மறுப்பெயர் தான் சகோதரத்துவம்; சுதந்திரம் என்பது சுயோச்சையாக நடமாடும் உரிமை; உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று, சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார்.

பெரியார் போற்றிய பெருந்தகை;

- "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்; பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி,
- அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் காணமுடியாது" என்று பெரியார் அவரை பாராட்டினார்.

நேரு புகழுதல்:

- "பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சேரும்" என்று நேரு அவரைப் புகழ்ந்தார்.

இராஜேந்திர பிரசாத் புகழ்தல்:

- "அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர்; மிகவும் ஆர்வத்துடனும் விரைந்து தனியனாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்" என்று இராஜேந்திர பிரசாத் பாராட்டினார்.

மறைவு:

- நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 6ஆம் நாள் புகழுடம்பு எய்தினார்.

பாரத ரத்னா விருது:

- இந்திய அரசு, பாரத ரத்னா(இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு 1990ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

## நற்றிணை

சொற்பொருள்:

- அரி - நெற்கதிர்
- சேறு - வயல்
- யாணர் - புதுவருவாய்
- வட்டி - பனையோலைப் பெட்டி
- நெடிய மொழிதல் - அரசரிடம் சிறப்புப் பெறுதல்.

இலக்கணக்குறிப்பு:

- சென்ற வட்டி - பெயரெச்சம்
- செய்வினை - வினைத்தொகை
- புன்கண், மென்கண் - பண்புத்தொகை
- ஊர - விளித்தொடர்

பிரித்தறிதல்:

- அங்கண் = அம் + கண்
- பற்பல = பல + பல
- புன்கண் = புன்மை + கண்
- மென்கண் = மேன்மை + கண்

ஆசிரியர் குறிப்பு:

- மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் பெயர் பெற்றார்.
- இவர், ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார்.
- இவர் பாடியனவாக் நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றாக ஐந்து பாடல் உள்ளன.

நூல் குறிப்பு;

- பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள்.
- "நல்" என்னும் அடைமொழியை கொண்டு போற்றப்படுவது நற்றிணை.
- இதில் ஐந்து திணைகளுக்குமான பாடல்கள் உள்ளன.

tnpsctamilnadu.weebly.com

- இதிலுள்ள பாடல்கள், ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை.
- இப்பாடல்களைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை.
- தொகுப்பித்தவர் "பன்னாடு தந்த மாறன் வழுதி".
- இதில் நானூறு பாடல்கள் உள்ளன.
- பாடினோர் இருநூற்றெழுபத்தைவர்.

## புறநானூறு

சொற்பொருள்;

- துகிர் - பவளம்
- மன்னிய - நிலைபெற்ற
- செய - தொலைவு
- தொடை - மாலை
- கலம் - அணி

இலக்கணக்குறிப்பு:

- பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் - எண்ணும்மை
- மாமாலை - உரிச்சொற்றொடர்
- அருவிலை, நன்கலம் - பண்புத்தொகை

பிரித்தறிதல்:

- அருவிலை = அருமை + விலை
- நன்கலம் = நன்மை + கலம்

ஆசிரியர் குறிப்பு:

- இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்.
- கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொது, பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான்.
- அப்போது அவருடன் இருந்தவர் கண்ணகனார்.
- அவன் உயிர் துறந்தபொழுது மிகவும் வருந்தினார் கண்ணகனார்.

நூல் குறிப்பு:

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.
- இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

## பேச்சுக்கலை

பேச்சுக்கலை:

- நுண்ணிய நூல்பல கற்றவற்கே அமையத்தக்க அரியதொரு கலையே பேச்சுக்கலை.

மேடைப்பேச்சில் நல்ல தமிழ்:

- மேடைப்பேச்சில் நல்ல தமிழை கொண்டு மக்களை ஈர்த்தவர்கள் திரு.வி.க, அண்ணா, ரா.பி.சேதுபிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார்.

பேச்சும் மேடைப்பேச்சும்:

- பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது; ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததனை உணர்த்தும் வகையிலும் தெரிவித்தல் வேண்டும்.
- பேச்சில் கேட்கின்றவனைக் கேட்கின்றவனாகவே மதிக்கலாம். ஆனால், மேடைப்பேச்சிலோ கேட்கின்றவனை மதிப்பிடுவோனாக மதித்தல் வேண்டும்.

பேச்சுக்கலையில் மொழியும் முறையும்:

- மேடைப்பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி என்றாலும், அக்கருத்துக்களை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன.

கருத்தைக் விளக்க மொழி கருவியாக உள்ளது.

முக்கூறுகள்:

- பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்திக் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துக் பேசுவதையே பேச்சுமுறை என்கிறோம்.
- இதனை எடுத்தல், தொடுதல், முடிதல் எனவும் கூறலாம்.

எடுத்தல்:

- பேச்சை தொடங்குவது எடுப்பு.
- தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினை குறித்த நல்லெண்ணம் தோன்றாது.
- சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும்

தொடுத்தல்:

- தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும் முறை தொடுத்தல் எனப்படும்.
- இடையிடையே சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே தொடுத்தல் எனப்படும்.

பேச்சின் அணிகலன்:

- எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகு படுத்துவதே அணி எனப்படும்.

கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

**உணர்த்தும் திறன்:**

- உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும்.
- பேச்சாளர், தாம் உணர்ச்சிவயப்படாது, கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பேசுதல் வேண்டும்.

**முடித்தல்:**

- பேச்சை முடிக்கும்போது தான், பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும் கேட்போர் மனதில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும்.
- பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக் கூறி முடிதல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன.

## பெரியபுராணம்

**சொற்பொருள்:**

- காய்ந்தார் - நீக்கினார்
- ஆ - பசு
- நிறைகோல் - துலாக்கோல்(தராசு)
- மந்தமாருதசீதம் - குளிர்ந்த காற்றுடன் கூடிய நீர்
- ஈறு - எல்லை
- புவனம் - உலகம்
- தெருளும் - தெளிவில்லாத
- கமலம் - தாமரை
- திருநீற்றுக்காப்பு - திருநீறு
- பொற்குருத்து - இளமையான வாழைக்குருத்து
- மல்லல் - வளமான
- வால் - கூரிய
- அல்லல் - துன்பம்
- மனை - வீடு
- மேதி - எருமை
- தடம் - தடாகம்
- சந்தம் - அழகு
- கல்மிதப்பு - கல்லாகிய தெப்பம்
- சூலை - கொடிய வயிற்றுநோய்
- கரம் - கை
- மிசை - மேல்
- நேர்ந்தார் - இசைந்தார்
- ஒல்லை - விரைவு
- ஆம் - அழகிய
- அரா - பாம்பு
- அங்கை - உள்ளங்கை

tnpsctamilnadu.weebly.com

- உதிரம் - குருதி
- மறைநூல் - நான்மறை
- பூதி - திருநீறு
- பணிவிடம் - பாம்பின் நஞ்சு
- மேனி - உடல்
- சேய் - குழந்தை
- மெய் - உண்மை
- சவம் - பிணம்

இலக்கணக்குறிப்பு:

- செலவொழியா வலி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- வழிக்கரை - ஆறாம் வேற்றுமைத்தொகை
- உறுவேனில் - உரிச்சொற்றொடர்
- நீர்த்தடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
- பந்தர் - கடைப்போலி
- அணைந்த வாகீசர் - பெயரெச்சம்
- பொங்குகடல் - வினைத்தொகை
- பெருமையறிந்து - இரண்டாம் வேற்றுமைத் தொகை
- அறிந்து, அடைந்து - வினையெச்சம்
- கரகமலம் - உருவகம்
- பொழிந்திழிய - வினையெச்சம்
- தேசம் - இடவாகு பெயர்

வந்தவர் - வினையாலணையும் பெயர்

- நற்கரிகள், இன்னமுதம் - பண்புத்தொகை
- தாய்தந்தை - உம்மைத்தொகை
- மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்
- தீண்டிற்று - ஒன்றன்பால் வினைமுற்று
- துளங்குதல் - தொழிற்பெயர்
- பூதி சாத்த - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- அங்கணர் - அன்மொழித்தொகை
- நோக்கி - வினையெச்சம்
- எழுந்து, சென்று - வினையெச்சம்
- பணிவிடம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- கேளா - செய்யா என்னும் வாய்ப்பாடு வினையெச்சம்

பிரித்தறிதல்:

- செலவொழியா = செலவு + ஒழியா
- வழிக்கரை = வழி + கரை
- வந்தணைந்த = வந்து + அணைந்த
- எம்மருங்கும் = எ + மருங்கும்
- எங்குரைவீர் = எங்கு + உறைவீர்
- கண்ணருவி = கண் + அருவி
- உடம்பெல்லாம் = உடம்பு + எல்லாம்
- திருவமுது = திரு + அமுது
- மனந்தழைப்ப = மனம் + தழைப்ப
- நற்கரிகள் = நன்மை + கறிகள்
- இன்னமுது = இனிமை + அமுது
- வாளரா = வாள் + அரா
- அங்கை = அம் + கை
- நான்மறை = நான்கு + மறை
- பாவிசை = பா + இசை

## ஆசிரியர் குறிப்பு:

- பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார்.
- இவர் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் பிறந்தவர்.
- இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்.
- இவர் அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர்.
- இவர் உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்.
- இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும் தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றுவர்.
- இவரின் காலம் கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டு.

## நூல் குறிப்பு:

- தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர்.
- அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் “பெரியபுராணம்” என்னும் பெயர் பெற்றது.
- இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் “திருத்தொண்டர் புராணம்” என்பதாகும்.
- தில்லை நடராசப்பெருமான், “உலகெலாம்” என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர்.
- மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், “பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ” எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்கிறார்.

tnpsctamilnadu.weebly.com

- உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், "பெரியபுராணம்" என்பார் திரு.வி.க.

## திரைப்படக்கலை உருவான கதை

### திரைப்படத்தின் சிறப்பு:

- உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும், மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துக்கொள்ளும் உலகமொழி திரைப்படம்.
- அது உதடுகளால் பேசும் மொழியன்று; உள்ளத்தால் பேசி, உணர்ச்சிகளால் உருவாகும் மொழி.

### திரைப்படத்தின் வரலாறு:

- ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830ஆம் ஆண்டு கண்டுப்பிடித்த பின்னர், எட்வர்ட் மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றிபெற்றார்.
- ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.
- எடிசன், ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தார்.
- பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.
- புதிய படவீழ்த்திகள் உருவாக, இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

### திரைப்படம்:

- நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகள் அமைத்தும் படம் முடியும்வரை உழைக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையாரை இயக்குனர் என்பர்.
- கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை அடைந்துள்ளது.

### திரைப்படச்சுருள்:

- திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
- படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும்.

### படம்பிடிக்கும் கருவி:

- இது ஒளிப்பதிவு செய்யப் பயன்படுகிறது.



tnpsctamilnadu.weebly.com

- படப்பிடிப்புக்கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருள் 16 படங்கள் வீதம் ஒன்றன்பின்ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.

ஒலிப்பதிவு:

- நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர்.

திரைப்படக்காட்சிப் பதிவு:

- ஒளிஒலிப்படக்கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப்பயன்படுகிறது.
- இக்கருவியில் மேற்பக்கம் ஒன்றும், அடிப்பக்கம் ஒன்றுமாக வட்டமான இரு பெட்டிகள் இருக்கும்.

கருத்துப்படம்:

- கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் "வால்ட் டிஸ்னி" என்பார் ஆவார்.
- படங்களை எழுதுவதற்குப் பதிலாகப் பொம்மைகளைக் கொண்டும் படங்களைத் தயாரிக்கின்றனர்.

## பாரதரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்

- இலங்கையில் உள்ள கண்டியில் 1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17ஆம் நாள் பிறந்தார்.
- பெற்றோர் = கோபாலமேனன், சத்தியபாமா.
- வறுமையின் காரணமாக் தமிழ்நாட்டில் உள்ள கும்பகோணம் நகருக்கு குடிபெயர்ந்தனர்.
- அங்கு ஆணையடிப் பள்ளியில் படித்தார். வருமையின் காரணமாக படிப்பை தொடரமுடியவில்லை.
- நாடகங்களில் நடித்து, திரைப்படத்துறையில் ஈடுபட்டுச் சிறுசிறு பாத்திரங்களில் நடித்துக் கதாநாயகனாக உயர்ந்தார்.
- அறிஞர் அண்ணாவின் பேச்சாற்றல் இவரை மிகவும் கவர்ந்தது.
- நடிப்பையும், அரசியலையும் தம் இரு கண்களாக கருதினார்.
- மக்கள் அவரை, "புரட்சி நடிகர்" என்றும், "மக்கள் திலகம்" என்றும் போற்றினர்.
- அறிஞர் அண்ணாவின் நெஞ்சம் கவர்ந்தவராக எம்.ஜி.ஆர். விளங்கியதனால், அவரை அறிஞர் அண்ணா, "இதயக்கனி" என்று போற்றினார்.
- இவர் 1963ஆம் ஆண்டு, சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆனார்.

tnpsctamilnadu.weebly.com

- 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 1972ஆம் ஆண்டில், தாமிருந்த இயக்கத்தில் இருந்து வெளியேறி புதிய கட்சியை தொடங்கினார்.
- அவர் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று முதல்வராகப் பதவி ஏற்றார்.
- 11 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பணியாற்றினார்.
- சென்னை பல்கலைக்கழகம் அவரது பணிகளைப் பாராட்டி, டாக்டர் பட்டம் வழங்கியது.
- இந்திய அரசு, சிறந்த நடிகருக்கான பாரத் பட்டம் வழங்கியது.
- மதிய உணவுத் திட்டத்தை சத்துணவு வழங்கும் திட்டம் ஆக மாற்றினார்.
- 24.12.1987 அன்று இயற்கை எய்தினார்.
- 1988ஆம் ஆண்டு இந்திய அரசு அவரின் மறைவுக்குப் பின் பாரதரத்னா விருது(இந்திய மாமணி) வழங்கியது.

## தமிழ்விடு தூது

**சொற்பொருள்:**

- அரியாசனம் - சிங்காதனம்
- பா ஒரு நான்கு - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
- வரம்பு - வரப்பு
- ஏர் - அழகு
- நார்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
- நெறிநாலு - வைதருப்பம்(ஆசுகவி),கௌடம்(மதுரகவி),பாஞ்சாலம்(சித்திரகவி),மாகதம்(வித்தாரகவி)
- நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
- சீத்தையர் - கீழானவர், போலிப்புலவர்
- நாளிகேரம் - தென்னை

**இலக்கணக்குறிப்பு:**

- செவியறுத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பிரித்தறிதல்:**

- நாற்கரணம் = நான்கு + கரணம்
- காரணத்தேர் = கரணத்து + ஏர்

- நாற்பொருள் = நான்கு + பொருள்
- இளங்கனி = இளமை + கனி
- விண்ணப்பமுண்டு = விண்ணப்பம் + உண்டு

நூற்குறிப்பு:

- தூது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அஃறினைப்பொருளையோ தூது அனுபுவதாகப் பாடுவது தூது இலக்கியம்.
- இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## தொன்மைத் தமிழகம்

மனித நாகரிகத் தொட்டில்:

- முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியாவை, "மனித நாகரிகத் தொட்டில்" என்பர்.

சிலபதிகாரப் பாடல்:

- தமிழகம் இன்றுபோல் இல்லாமல், குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது.
- இச்செய்தியைப் சிலப்பதிகாரப் பாடல் வரிகள் தெளிவாக உணர்த்தும்

பாவேந்தர்:

- புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழின் பழமை சிறப்பினைப் பெருமிதம் பொங்கி கூறுவது

வாணிகம்:

- தமிழர்கள் அறத்தின் வழியே வாணிகம் செய்தார்கள்.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொருள் ஈட்டினர்.

கடல் வாணிகம்:

- கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில்தோகையும்,சந்தனமும் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்தனர்.
- கி.மு.பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் அனுப்பப்பட்டன.
- தமிழர்கள் சாவகநாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

தனிநாயகம் அடிகளாரின் கூற்று:

- தமிழ்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இர்ருந்து வருகிறது.
- இந்தியாவில் இத்தகைய மரபுச் செய்தி வேறெங்குமில்லை என்றார் தனிநாயகம் அடிகளார்.

### மொழித் தொன்மை:

- "தமிழ்கெழு கூடல்" என புறநானூறு கூறுகிறது.
- "தமில்வேலி" எனப் பரிபாடல் கூறுகிறது.
- "கூடலில் ஆய்ந்த ஒன்தீந் தமிழின்" என் மணிவாசகம் கூறுகிறது.

### ஏற்றுமதியும் இறக்குமதியும்:

- தமிழர்களின் ஏற்றுமதி இறக்குமதி பற்றி குறிப்பிடும் நூல்கள், பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும்.
- காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் பொருள்கள் மண்டியும் மயங்கியும் கிடந்தததனைப் பட்டினப்பாலை அடிகள் கூறுகிறது.

### இசைக்கலை:

- பண்டையக்காலத் தமிழர்களின் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.
- "நரம்பின் மறை" என்று தொல்காப்பியம் கூறுகிறது.
- ஒப்பாரி என்பது, இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப் பற்றிப் பாடுவது.
- இன்றைய கருநாடக இசைக்குத் தாய் நம் தமிழிசையே.
- "பண்ணொடு தமிழொப்பாய்" என தேவாரம் கூறுகிறது.
- குழலினிது யாழினிது என்று இசைபோளியும் கருவிகளை வள்ளுவம் குறிக்கின்றது.

### உழவுத் தொழில்:

- "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்கிறது திருக்குறள்.
- "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எகிறது புறநானூறு.
- உழவுக்கு சிறப்பு பெற்ற நிலம் மருதநிலம்.

### பழந்தமிழர் வாழ்வு:

- அறத்தின் அடிப்படையில் தொடங்கியது தமிழர் வாழ்வு.
- "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்னும் புறப்பாடல், வீரத்தினை முதல் கடமையாக்கின்றது.
- ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர், பெண்களின் வீரத்தினை பாடியுள்ளார்.

## தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

### தொல்லியல்:

- தொல்பழங்காலம் பற்றிய ஆய்வையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் என்பர்.

- தொல்லியலை ஆங்கிலத்தில், "ஆர்க்கியாலாஜி" எனக் குறிப்பிடுவர்.
- மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் இருந்து, வரலாற்றுக்கு முந்தைய காலம் வரை உள்ள காலத்தையே தொன்மைக்காலம் என்பர்.

காவிரிப்பூம்பட்டினம்:

- 1963ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறையினர் பூம்புகார் அருகில் உள்ள "கிழார்வெளி" என்னும் இடத்தில மேற்கொண்ட கடல் அகழ்வாய்வின் போது கி.மு.மூன்றாம் நூற்றாண்டை சார்ந்த கட்டட இடிபாடுகள் கிடைத்தன.
- இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிகாரம்(புத்த பிக்குகள் தங்குமிடம்), வெண்கலத்தால் ஆன புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன.
- இவ்வாய்வு காவிரிப்பூம்பட்டினம் என்னும் நகரம் இருந்ததை உறுதி செய்தது.

காசுகள்:

- தருமபுரி, கரூர் மதுரை ஆகிய மாவட்டங்களில், கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலகட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- இவற்றின் ஒரு பக்கத்திலோ இரு பக்கங்களிலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன.
- இக்காசுகளில் சூரியன் மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திகம், கும்பம் முதலிய சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

முதுமக்கள் தாழிகள்:

- பண்டைய காலத்தில் இறந்தோரை, அவர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் ஒரு தாழியிட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது.
- இவ்வைகைத் தாழிகள், "முதுமக்கள் தாழிகள்" என்கிறோம்.
- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- கி.மு.300 முதல் கி.பி.300 வரையிலான காலகட்டங்களைச் சார்ந்த இத்தாழிகளில் இறந்தோரின் எலும்புகளுடன் தங்கத்தால் ஆன நெற்றிப்பட்டம், செம்பினால் ஆன ஆண், பெண் தெய்வ உருவங்கள், மற்றும் இரும்பினால் ஆன கத்திகள், விளக்குத் தாங்கிகள் முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன.

## திருக்குறள்

## சொற்பொருள்:

- மூத்த - முதிர்ந்த
- தேர்ந்து - ஆராய்ந்து
- உறாஅமை - துன்பம் வராமல்
- தமர் - உறவினர்
- தலை - சிறப்பு
- செற்றார் - பகைவர்
- தகைமை - தன்மை
- மதலை - துணை
- பொய்யா விளக்கம் - அணையா விளக்கு
- ஈனும் - தரும்
- புல்லார் - பற்றார்
- உல்குபொருள் - வரியாக வரும்பொருள்
- குழவி - குழந்தை
- குன்று - மலை
- கேண்மை - நட்பு
- நோய் - துன்பம்
- பேணி - போற்றி
- வன்மை - வலிமை
- சூழ்வார் - அறிவுடையார்
- இல் - இல்லை
- ஏமரா - பாதுகாவல் இல்லாத
- எள்ளுவர் - இகழ்வர்
- இருள் - பகை
- தீதின்றி - தீங்கின்றி
- உறுபொருள் - அரசு உரிமையால் வரும்பொருள்
- தெரு - பகை
- செவிலி - வளர்ப்புத்தாய்
- செருக்கு - இறுமாப்பு

## இலக்கணக்குறிப்பு:

- அறனறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- தேர்ந்து கொளல் - வினையெச்சம்
- உற்றநோய் - பெயரெச்சம்
- பெற்றியார் - வினையாலணையும் பெயர்
- திறனறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- கொளல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
- உறாஅமை - செய்யுளிசை அளபெடை
- கொளல் - தொழிற்பெயர்

tnpsctamilnadu.weebly.com

- வன்மை - பண்புப்பெயர்
- சூழ்வார் - வினையாலணையும் பெயர்
- துணையார் - வினையாலணையும் பெயர்
- பகைகொளல் - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- அறனீனும் - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- திறன் - கடைப்போலி
- தன்ஒன்னார் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- ஈன்குழவி - வினைத்தொகை
- குன்றேறி - ஏழாம் வேற்றுமைத்தொகை
- செறுநர் செருக்கு - ஆறாம் வேற்றுமைத்தொகை
- ஒழுகுதல் - தொழிற்பெயர்
- தக்கார் - வினையாலணையும் பெயர்
- இல்லை - குறிப்பு வினைமுற்று
- பொய்யா விளக்கம் - ஈறுகெட எதிர்மறைப் பெயரெச்சம்
- வந்த பொருள் - பெயரெச்சம்
- வாராப் பொருளாக்கம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- வேந்தன் பொருள் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- செல்வச்செவிலி - உருவகம்
- செய்க - வியங்கோள் வினைமுற்று
- ஒண்பொருள் - பண்புத்தொகை

## தேவாரம்

சொற்பொருள்:

- இடர் - துன்பம்
- பிணி - நோய்
- சேவடி -இறைவனின் செம்மையான திருவடிகள்
- ஏமாப்பு - பாதுகாப்பு
- நடலை - துன்பம்
- நமன் - எமன்

இலக்கணக்குறிப்பு:

- நற்சங்கு - பண்புத்தொகை
- வெண்குழை - பண்புத்தொகை
- மலர்ச்சேவடி - உவமைத்தொகை

- மீளா ஆள் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பிரித்தறிதல்:

- பிநியறியோம் = பிணி + அறியோம்
- எந்நாளும் = எ + நாளும்
- நாமென்றும் = நாம் + என்றும்

ஆசிரியர் குறிப்பு;

- திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர்.
- பெற்றோர் = புகழனார், மாதினியார்.
- இவரது தமக்கையார் திலகவதியார்.
- இயற் பெயர் = மருணீக்கியார்
- சிறப்பு பெயர்கள் = தருமசேனர், அப்பர், வாகீசர்.
- இவரின் நெறி = தொண்டு நெறி
- இவர் தாண்டகம் பாடுவதில் வல்லவர். அதனால் இவரை "தாண்டக வேந்தர்" எனப்படுவார்.
- இவரது காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு.
- திருவாமூர், கடலூர் மாவட்டம் பண்ணுருட்டியை அடுத்து உள்ளது.

நூல் குறிப்பு:

- தேவாரம் என்னும் சொல்லைத் தே+வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தன்மையை உடைய இசைப்பாடல்கள் என்று கூறுவர்.
- தே+ஆரம் எனப் பிரித்து தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பாமாலை என்றும் கூறுவர்.

அப்பர் அருளிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்.

## தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்

விண்ணியல அறிவு:

- உலகம் உருண்டை என்று பதினாறாம் நூற்றாண்டிற்கு பிறகே மேலை நாட்டினர் உறுதி செய்தனர்.
- ஆன்மஇயல் ஏசும் திருவாசகம் விண்ணியலையும் பேசுகிறது

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றேழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.



tnpsctamilnadu.weebly.com

- பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதை இப்பாடல் ஆழமாக விளக்குகிறது.
- உலகம் என்னும் தமிழ்ச்சொல் "உலவு" என்னும் சொல்லில் இருந்து பிறந்தது.
- உலவு என்பது சுற்றுதல் என்ற பொருளைத் தரும்.
- ஞாலம் என்னும் சொல் "ஞால்" என்னும் சொல்லில் இருந்து பிறந்தது. இதன் பொருள் "தொங்குதல்".
- வானத்தில் காற்றில்லாப் பகுதி உண்டு எம்பதை தமிழர்கள் அறிந்திருந்தனர்.
- இதனை "வறிது நிலைஇய காயமும்" என்னும் புறநானூறு வரி விளக்குகிறது.
- "வலவன் ஏவா வானூர்தி" என்னும் புறநானூற்றுத் தொடரினால் தமிழர்கள் வானூர்தியை விண்ணில் செலுத்தி இருக்கலாம் என அறியப்படுகிறது.

பொறியியல் அறிவு:

- கரும்பை பிழிவதற்கு எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.
- இதனைத் "தீம்பிழி எந்திரம் பந்தல் வருத்த" என்னும் பதிற்றுபத்து வரிகள் குறிப்பிடும்.
- நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக் கிணறு, அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, "அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்" என்னும் பெருங்கதை வரியின் வாயிலாக அறியமுடிகிறது.
- பெருங்கதையில் வரும் எந்திர யானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் "டிராய்" போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.

கனிமவியல் அறிவு:

- சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்குகிறது.

ஊர்கான் காதையில்,

ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்
இலங்குகதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்

என்னும் இவ்வடிகள் ஐவகை மணிகளை விளக்குகிறது.

மண்ணியல் அறிவு:

- தமிழர், தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்ப பாகுபடுத்தியுள்ளனர். அவையே ஐவகை நிலங்கள். மேலும் செம்மண், களர்நிலம், உவர்நிலம் எனவும் பகுத்துள்ளனர்.
- நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் உவர்நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர்நிலம் எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.

- செம்மண் நிலத்தை அதன் பயன் கருதிப் போற்றினர். இதனைச் "செம்புலப் பெயல் நீர்போல" என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும்.
- உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை. இதனை, "அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்" என்னும் புறநானூறு வரிகள் விளக்குகிறது.
- எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம். இதனைப் "பயவாக் களரனையர் கல்லாதவர்" என்பார் திருவள்ளுவர்.

## அணுவியல் அறிவு:

- ஔவை,"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி' என்று சொல்கிறார்.
- "ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்" எனக் கம்பர் கூறுவார்.
- இதன் மூலம் அணுச்சேர்ப்பும் அனுப்பிரிப்பும் பற்றிய கருத்துக்கள் அறியப்பட்டுள்ளது.

## நீரியல் அறிவு:

- நீரியல் இயக்கமே உலகை வளப்படுத்துகிறது.
- இதனை, திருவள்ளுவர் தன் குரலில் கூறியுள்ளார்.

நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

## மருத்துவ அறிவு:

- "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்பார் திருமூலர்.
- திருவள்ளுவர் "மருந்து" என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.
- இன்று பரவலாகப் பயின்று வரும் இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவ முறையை, அன்றே நம் தமிழர் கண்டறிந்துள்ளனர்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

## அறுவை மருத்துவம்:

- "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி

அடல்உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்" என்னும் கம்பரின் வாக்கு அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

- மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடுமுட்டியதால், அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவி சரிசெய்த செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.
- "புல்லாகிப் பூடாய்" என்னும் திருவாசக வரிகள் பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாய் கூறுகின்றன.

- "மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்" எனத் தொடங்கும் பாடலடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன.

## சீறாப்புராணம்

### சொற்பொருள்:

- தெண்டிரை - தெளிந்த அலைகள்
- தடக்கரி - பெரிய யானை
- தாரை - வழி
- உழுவை - புலி
- வெள்ளெயிறு - வெண்ணிறப் பற்கள்
- வள்ளுகிர் - கூர்மையான நகம்
- நிணம் - கொழுப்பு
- கிரி - மலை
- தொனி - ஓசை
- கவை - பிளந்த
- எண்கு - கரடி
- எழில் - அழகு
- இடர் - துன்பம்
- மாத்திரம் - மலை
- புளகிதம் - மகிழ்ச்சி
- பூதரம் - மலை
- திறல் - வலிமை
- மந்தராசலம் - மந்தரமலை
- சிரம் - தலை
- உன்னி - நினைத்து
- கான் - காடு
- திரள் - கூட்டம்
- அடவி - காடு
- கனல் - நெருப்பு
- வனம் - காடு
- மடங்கள் - சிங்கம்
- கோடு - தந்தம்
- உரும் - இடி
- மேதி - எருமை
- கேழல் - பன்றி
- மரை - மான்
- புயம் - தோள்
- வேங்கை - புலி
- கேசரி - சிங்கம்
- கவின் - அழகு
- தெரிசனம் - காட்சி
- புந்தி - அறிவு
- சந்தம் - அழகு
- செகுதிடுவது - உயிர்வதை செய்வது
- தெளிந்தார் - தெளிவு பெற்றார்

## இலக்கணக்குறிப்பு:

- படர்ந்த தெண்டிரை - பெயரெச்சம்
- தொழுது அறைகுவன் - வினையெச்சம்
- நெடுநீர் - பண்புத்தொகை
- புடைத்து, நிமிர்ந்து - வினையெச்சம்
- வெள்ளெயிறு - பண்புத்தொகை
- முதிர்ந்தமேதி - பெயரெச்சம்
- செவிபுக - ஏழாம் வேற்றுமைத்தொகை
- செங்கதிர், பெருவரி - பண்புத்தொகை
- வால்குழைத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- எழுந்து, புதைத்து, வணங்கி - வினையெச்சம்
- சிரமுகம் - உம்மைத்தொகை
- புகுக - வியங்கோள் வினைமுற்று
- நன்று நன்று - அடுக்குத்தொடர்
- நதிப்பரப்பு - ஆறாம் வேற்றுமைத்தொகை
- தடக்கரி - உரிச்சொற்றொடர்
- பொருந்தி - வினையெச்சம்
- கால் மடித்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- பெருங்கரி - பண்புத்தொகை
- பொதிந்தமெய் - பெயரெச்சம்
- நின்ற வேங்கை - பெயரெச்சம்
- பூதரப்புயம் - உவமைத்தொகை
- பெருஞ்சிரம், தண்டளி - பண்புத்தொகை
- நனிமனம் - உரிச்சொற்றொடர்
- உயிர்செகுத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- மலரடி - உவமைத்தொகை
- கொலைப்புலி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

## பிரித்தறிதல்:

- பணிந்திவர் = பணிந்து + இவர்
- சிரமுகம் = சிரம் + முகம்
- பெருஞ்சிரம் = பெருமை + சிரம்
- தண்டளிர்ப்பதம் = தண்மை + தளிர் + பதம்
- திண்டிறல் = திண்மை + திறல்

- எண்கினங்கள் = எண்கு + இனங்கள்
- வீழ்ந்துடல் = வீழ்ந்து + உடல்
- கரிக்கோடு = கரி + கோடு
- பெருங்கிரி = பெருமை + கிரி
- இருவிழி = இரண்டு + விழி
- வெள்ளெயிறு = வெண்மை + எயிரு
- உள்ளுறை = உள் + உறை
- நெடுநீர் = நெடுமை + நீர்
- அவ்வழி = அ + வழி
- தெண்டிரை = தெண்மை + திரை

ஆசிரியர் குறிப்பு:

- சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்.
- இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்.
- அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க சீறாப்புராணம் இயற்றினார்.
- நூல் முற்றும் முன்னரே சீதக்காதி மறைந்தார்.
- அபுல்காசிம் என்ற வள்ளல் உதவியால் இந்நூல் நிறைவு பெற்றது.
- இவர் எண்பது பாக்களால் ஆன முதுமொழிமாலை என்னும் நூலையும் படைத்துள்ளார்.
- இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

நூல் குறிப்பு;

- சீறா = வாழ்க்கை, புராணம் = வரலாறு.
- இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது.
- 5027 விருதப்பாக்களால் ஆனது.

## காந்தியம்

விளையும் பயிர்:

- காந்தியடிகள் சிறுவனாக இருந்தப்போது கேட்ட குஜராத்தி பாடல் மூலம் அவருக்கு இன்னாசெய்யாமை(அஹிம்சை) என்னும் கருத்து அவருள் வேரூன்றியது.
- “சிரவண பிதுர்பத்தி” என்னும் நாடக நூலைப் படித்தான் மூலம் பெற்றோரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற எண்ணம் அவருள் வந்தது.

tnpsctamilnadu.weebly.com

- அரிச்சந்திரன் நாடகம் பார்த்த பின் அவருக்கு பொய் பேசக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது.
- இயேசுநாதரின் மலைச்சொற்பொழிவை பற்றிய நூலைப் படித்தப் பொது அதன் கருத்துகள் அவரிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின.
- பகவத் கீதையை படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்.
- ரஷ்ய அறிஞர் தால்சுதாய் எழுதிய "உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு" என்னும் நூலில் "இன்னாசெய்தார்க்கும்" என்னும் திருக்குறளை மொழிபெயர்த்து எழுதியிருந்தார். அந்நூலினை படிக்கும் பொது திருக்குறள் மீதும், தமிழ் மீதும் பற்று ஏற்பட்டது.

அறவழி விடுதலைப்போர்:

- "மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையாகவும் இருந்தால் மட்டும் போதாது. அதனை அடையும் வழிமுறைகளும் தூயமையானதாகப் பிறருக்குத் துன்பம் தராததாக இருக்கவேண்டும்" என்றார்.
- "வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது" என்றார்.

எளிமை ஒரு அறம்:

- ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து அனைவருக்கும் கொடுத்தார்.
- கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றார்.
- எளிமையை ஒரு அறமாகவே போற்றினார்.
- காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்த பொது, ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியத்தை கண்டு தாமும் அன்று முதல் மேலாடை அணிவதை நிறுத்திக்கொண்டார்.
- அரையாடையுடன் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் கலந்துக்கொண்ட காந்தியடிகளை "அரை நிருவாணப் பக்கிரி" என்று ஏளனம் செய்தார் அப்போதைய இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில்.

மனித நேயம்:

- மனிதரோடு மனிதராக வாழ்ந்து மகாத்மாவாக உயர்ந்தவர்.
- என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்று தான் என்றார் காந்தியடிகள்.
- நான் ஒரு தேசபக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான் என்றார்.
- மனிதர் மொழியாலும் நாட்டாலும் உணர்தப்படுவதை காட்டிலும் மனிதத்தன்மையால் பிறருக்கு உணர்த்தப் படுவதே சிறந்து என்பார்.

- "உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும்" என்றார்.

இன்னா செய்யாமை:

- தென்னாப்ப்ரிகாவில் இந்தியர்களுக்கு எதிரான கறுப்புச் சட்டங்களைக்காந்தியடிகள் கொளுத்தியதால் சிறையில் அடைக்கப்பட்டார்.
- சிறையில் சிறப்பாக ஒரு ஜோடி செருப்பை தைத்தார். அதனை தன்னை சிறையில் அடைத்த ஆளுநர் ஸ்மட்ஸ் என்பவருக்கு அளித்தார்.
- அவரும் இவருக்கு விவிலியம் சார்ந்த இரு நூல்களை பரிசாக கொடுத்தார்.
- ஸ்மட்ஸ், காந்தியடிகள் இறந்த பொது, அவர் கொடுத்த காலனியை தன் பூசை அறையில் வைத்து வணங்கி வருவதாக கூறினார்.

இளைஞர்களின் கடமை:

- நமது நாட்டிற்கே உரிய கிராமத் தொழில்களையும் நாட்டுப்புறக் கலைகளையும் வளர்க்க இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றார்.
- "தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது" என்றார்.
- தீண்டாமைக் கொடுமையை வலுவுடன் எதிர்த்து நிற்குமாறு இளைஞர்களுக்கு அறிவுறுத்தினார்.

## கலித்தொகை

சொற்பொருள்:

- கிளை - சுற்றம்
- நோன்றல் - பொறுத்தல்

இலக்கணக்குறிப்பு;

- ஒழுகுதல் - தொழிற்பெயர்
- பொறுத்தல் - தொழிற்பெயர்

பிரித்தறிதல்;

- அன்பெனப்படுவது = அன்பு + எனப்படுவது
- பண்பெனப்படுவது = பண்பு + எனப்படுவது

ஆசிரியர் குறிப்பு:

- நல்லந்துவனார் சங்க காலத்தவர்.
- இவரை பற்றிய குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.
- இவர் நெய்தல் கலியில் 33 பாடல்கள் பாடியுள்ளார்.
- கலித்தொகையை தொகுத்தவர் இவரே.

### நூல் குறிப்பு:

- இந்நூல் கலிப்பாவால் ஆனது.
- இது நாடகப் பாங்கில் அமைந்துள்ளது.
- இசையோடு பாடுவதற்கு ஏற்றது.
- இந்நூலில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து 150 பாடல்கள் உள்ளன.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது.
- இந்நூலை "கற்றறிந்தோர் ஏத்தும் கலி" எனச் சிறப்பிப்பர்.

## நந்திக் கலம்பகம்

### சொற்பொருள்:

- புயல் - மேகம்
- பனண - மூங்கில்
- பகரா - கொடுத்து
- பொருது - மோதி
- நிதி - செல்வம்
- புனல் - நீர்
- கவிகை - குடை

### இலக்கணக்குறிப்பு:

- பொழிதருமணி - வினையெச்சம்
- வருபுனல் - வினையெச்சம்
- நிதிதருகவிகை - வினையெச்சம்

### நூல் குறிப்பு:

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
- பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனை பாட்டுடைத் தலைவனாக கொண்டது இந்நூல்.
- கலம்பக நூல்களில் இதுவே முதல் நூல்.
- கலம்பகம் என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- பலவகைப் பொருள்களைப் பற்றிப் பாடல்களைக் கலந்து இயற்றப்பெரும் நூல் கலம்பகம்.
- கலம்பகம் பதினெட்டு உருபுகளை கொண்டது.

## நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

tnpsctamilnadu.weebly.com

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே

- குலசேகர ஆழ்வார்

சொற்பொருள்:

- மீன்நோக்கும் - மீன்கள் வாழும்
- என்பால் - என்னிடம்
- தார்வேந்தன் - மாலையணிந்த அரசன்
- கோல்நோக்கி - செங்கோல் செய்யும் அரசனை நோக்கி

இலக்கணக்குறிப்பு:

- நோக்காய் - முன்னிலை ஒருமை வினைமுற்று
- கோல்நோக்கி - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- தார்வேந்தன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- வாழும்குடி - பெயரெச்சம்

பிரித்தறிதல்:

- பற்றில்லேன் = பற்று + இல்லேன்
- போன்றிருந்தேன் = போன்று + இருந்தேன்

ஆசிரியர் குறிப்பு:

- கேரள மாநிலத்தில் உள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர் குலசேகர ஆழ்வார்.
- இராமபிரானிடம் பக்தி மிகுதியாக கொண்டதால், இவர் "குலசேகரப் பெருமாள்" எனவும் அழைக்கப்பட்டார்.
- இவர் 12 ஆழ்வார்களுள் ஒருவர்.
- இவர் இயற்றிய பெருமாள் திருமொழியில் 105 பாசுரங்கள் உள்ளன.
- இவர் தமிழில் பெருமாள் திருமொழியும், வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.
- குலசேகரர், திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால், அதற்குக் குலசேகரன் வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது.
- இவரின் காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு.

## திருவருட் பிரகாச வள்ளலார்

மறுமலர்சிக் காலம்:

- பத்தொன்பதாம் நூற்றாண்டை தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்பர்.

tnpsctamilnadu.weebly.com

- அக்காலத்தே புலவர் பெருமக்களாலும் சமூகச் சீர்திருத்தச் செம்மல்களாலும் போற்றப்படும் பெருஞ்சிறப்பை பெற்றவர் வள்ளலார்.

வருவிக்க உற்றவர்:

- கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் 05.10.1823இல் இராமையா, சின்னம்மை இணையார்க்கு ஐந்தாவது மகவாக இராமலிங்கர் பிறந்தார்.
- ஆலய அந்தணர் இவர் குழந்தையாக இருந்த பொழுது, இவரை "இறையருள் பெற்ற திருக்குழந்தை" என்று பாராட்டினார்.
- "அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்து" என இறைவன் தம்மை வருவிக்க உற்றதாகக் கூறுவார்.
- இவர் சபாபதி என்பவரிடம் கல்வி கற்றார்.
- ஒன்பது வயதிலேயே பாடல் புனையும் திறன் பெற்றிருந்தார்.

உத்தம மனிதர்:

- திகம்பர சாமியார், இவரை "ஓர் உத்தம மனிதர்" என்றார்.

ஒருமையுணர்வு:

- சென்னையில் உள்ள கந்தக்கோட்டத்து இறைவனை இராமலிங்கர் வணங்கி பாடிய பாடல்களின் தொகுப்பே "தெய்வமணிமாலை".

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

- இராமலிங்கர், "வடிவுடை மாணிக்கமாலை" என்னும் நூலையும், திருவெற்றியூர் சிவபெருமான் மீது "எழுந்தரியும் பெருமான் மாலை" என்னும் நூலையும் பாடினார்.

புரட்சித் துறவி:

- ஒருமைவாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம் காண விரும்பினார்.

ஆணும் பெண்ணும் சமம் என்றார்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகிஉலா கியல்நடத்தல் வேண்டும்
சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்

பசிப்பிணி மருத்துவர்:

- "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பயிர்வாடத் தாம் வாடினார்.

- வடலூரில் “சத்திய தருமச்சாலை” நிறுவி அனைவர்க்கும் உணவளித்தார்.

பேரின்ப வீட்டின் திறவுகோல்;

- “உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்” என்றார் வள்ளலார்.
- கடவுளின் பெயரால் உயிர் கொலை செய்வதனை அறவே வெறுத்தார்.
- போரில்லா உலகை படைக்க விழைந்தார்.

புதுநெறி கண்ட புலவர்:

- ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் “திருவருட்பா” என மக்கள் போற்றுகின்றனர்.
- இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார்.
- பாரதியார் இவரை “புதுநெறி கண்ட புலவர்” எனப் போற்றினார்.

தமிழ்ப்பற்று:

- தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்றார்.
- பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுவதற்கும் இனிமை உடைய மொழி என்றார்.

இறைநிலை அடைதல்:

- 1874ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாள் அன்று இறவாநிலை எய்தினார்.

## அயோத்திதாசப் பண்டிதர்

தோற்றம்:

- சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள, மக்கிமா நகரில், 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் பிறந்தார்.
- இவரின் தந்தையார் பெயர் கந்தசாமி.
- இவரின் இயற்பெயர் = காத்தவராயன்.

சிறப்பு:

- இவர் தென்னிந்திய சீர்திருத்தத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

குருவை போற்றிய குருமணி:

- இவர் அயோத்திதாசர் என்பவரிடம் கல்வி கற்றார்.
- இவர் சித்த மருத்துவமும் பயின்றார்.
- தம் ஆசிரியர் பெயரையே தம் பெயராக ஆக்கிக்கொண்டார்.
- அவரின் ஆசிரியர் எழுதிய கவிதையை, தாம் பிற்காலத்தில் தொடங்கிய “ஒரு பைசாத் தமிழன்” எனும் இதழில் வெளியிட்டார்.

திருமணம்:


tnpsctamilnadu.weebly.com

- இவர் நீலகிரி மலைப்பகுதியில் வாழும் தொடர் இனப்பிரிவில் கலப்புத்திருமணம் செய்துக்கொண்டு பத்து ஆண்டுகள் இரங்கூன் சென்று வாழ்ந்தார்.

புத்த நெறி:

- இவர் புத்த நெறியால் கவரப்பட்டார்.
- புத்த மதக் கருத்துக்களை எல்லோருக்கும் எடுத்துரைத்தார்.
- தமக்குப் பிறந்த மகன்களுக்குப் பட்டாபிராமன், மாதவராம், சானகிராமன், இராசாராம் என்று பெயர் சூட்டினார்.
- தம் மகள்களுக்கு அம்பிகதேவி, மாயாதேவி என்று பெயரிட்டார்.

சமூகப் பணி:

- இவர் மருத்துவர் என்றும் பண்டிதர் என்றும் அழைக்கப்பெற்றவர்.
- எவரையும் சாதி பெயரை சொல்லி அழைப்பது தவறு என்றார்.
- தாழ்த்தப்பட்டவர்களுக்குத் கல்வி வசதி, கல்வி உதவித்தொகை, கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசுவேலை போன்றவற்றை போராடி பெற்று தந்தார்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சென்னையில் ஐந்து இடங்களில் “ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள்” தொடங்கினார்.

இதழ்ப்பணி:

- அன்றைய காலணா விலையில் “ஒரு பைசாத் தமிழன்” என்ற இதழை வெளியிட்டார்.
- அது 19.06.1907 முதல் சென்னை இராயப்பேட்டையில் இருந்து புதன் தோறும் நான்கு பக்கங்களுடன் வெளிவந்தது.

புதிய தீபாவளி:

- எள்ளு செடியின் விதையில் இருந்து நெய் கண்டுபிடித்த திருநாளே தீபாவளி என்று புதிய விளக்கம் தந்தார்.
- அதற்கு ஆதாரமாக ஜப்பான் நாட்டில் இன்றும் நுகர்பொருள் கண்டுபிடிப்புத் திருநாளாகத் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்றார்.

இயற்றிய நூல்கள்:

- “புத்தரது ஆதிவேதம்”(28 காதைகள், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழி துணையுடன் எழுதினார்).
- இந்திரதேசத்து சரித்திரம.

பிறப்பணி:

- தமிழில் எழுத்து சீர்திருத்தம் செய்தார்.
- திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளார்.

மறைவு:

- "நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது ஒன்றே. அதாவது, உங்களுடைய தருமமும் கருமமுமே உங்களைக் காக்கும்" என்றார்.
- 1914ஆம் ஆண்டு மேமாதம் ஐந்தாம் நாள் மறைந்தார்.

## நிற்க நேரமில்லை

இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி
என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றிளைப் பாறுக முற்றிடத்தே - தம்பி
தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே!
சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு
நல்லசெடி இளைப் பாறிடுமோ?
வேதனை யாவும் மறந்ததுபார் - செடி
வெற்றி கொண்டேந்திய பூவினிலே

- சாலை இளந்திரையன்

**சொற்பொருள்:**

- செத்தை - குப்பைகூளம்
- இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்

**ஆசிரியர் குறிப்பு:**

- சாலை. இளந்திரையனின் பெற்றோர் இராமையா, அன்னலட்சுமி.
- இவர் திருநெல்வேலி மாவட்டம் சாலைநயினார் பள்ளிவாசல் என்னும் இடத்தில பிறந்தார்.
- தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவாரக இருந்தார்.
- உலகத்தமிழ் ஆராய்சிக் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்.
- 1991இல் "பாவேந்தர் விருதினை" பெற்றவர்.
- காலம் = 06.09.1930 - 04.10.1998.

**நூல் குறிப்பு:**

- இப்பாடல் "பூத்தது மானுடம்" என்னும் கவிதைத் தொகுப்பில் இல்லது.

மேலும் இவர் புரட்சி முழக்கம், உரை வீச்சு போன்ற நூல்களை படைத்துள்ளார்.

**நூலகம்:**

- ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால் தான் அன்றாட உலக நடப்புகளைத் அறிந்த மனிதனாகக் கருதப்படுவான் என யுனெஸ்கோ கூறியுள்ளது.
- கிரீஸ் நகர அரசுகளே முதன் முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.
- இந்தியாவில் உள்ள நூலகங்களில் கல்கத்தா தேசிய நூலகம் முதன்மையானது.
- புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- ஆங்கிலத்தில் "லைப்ரரி" என்னும் சொல் நூலகத்தை குறிக்கின்றது.
- இலத்தின் மொழியில் "லிப்ரா" என்னும் சொல்லிற்குப் புத்தகம் என்பது பெயர்.
- இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழக அரசுத் தான் 1948ஆம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டத்தை இயற்றியது.
- தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை "புத்தகப்பூங்கொத்து" என்னும் வகுப்பறை நூலகத் திட்ட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்திய நூலகத் தந்தை = சீர்காழி சீ.இரா.அரங்கநாதன்.

tnpsctamilnadu.weebly.com